பக்கங்கள் 19 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 16 சனிக்கிழமை 29.06.2024 அதிர்வு 334

## வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இரு நாட்கள் விவாதம்

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானத்தை ஜூலை 2 மற்றும் 3 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மா 03▶



### அரசியல் உரிமைகளைப் பெற


# மக்கள் ஆணையே எமக்கு வேண்டும்!

### அந்தப் பொறுப்பை சர்வதேச சமூகத்திடம் நாம் ஒப்படைக்கப்போவதில்லை என்கிறார் மனோ

“சர்வதேச சமூகத்திடம் மலையகத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தரும் பொறுப்பை நாம் ஒப்படைக்க போவதில்லை. எமக்கான அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியான உரிமைகளைப் பெறுவது, அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது, அவற்றுக்காகப் பேரம் பேசுவது ஆகியவற்றைத் தேர்தல்களில் எமது மக்கள் வழங்கும் மக்கள் ஆணையால் கிடைக்கும் எமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி உள்நாட்டில் 02▶

# மடு வீதியில் கோர விபத்து! இளம் குடும்பஸ்தர் மரணம்!!

(எஸ்.ஆர்.லெம்பேட்)



மன்னார், மடு பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள இரண்டாம் கட்டைப் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் மற்றைய நபர் படுகாயங்களுடன் முருங்கன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மடு – ஜோதிநகர், இரண்டாம் கட்டைப் பாலத்தின் அருகில் விபத்துக்குள்ளாகியதில் 35 வயதுடைய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மன்னார், பெரியகமம் பிரதேசத்தில் வசித்து வரும் இளம் குடும்பஸ்தரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

படுகாயமடைந்தவர் முருங்கன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த நபரே படுகாயமடைந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்தது.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மொட்டுக் கூட்டை உடைத்தார் ரணில்! ஏழு பங்காளிகள் அவர் பக்கம் பல்டி!!

அரசியலில் கோலோச்சியிருந்த காலப்பகுதியில் உறுப்பினர்களை விலைக்கேனும் வளைத்துப் போட்டு கட்சிகளை இரண்டாக உடைப்பது – பிளவுபடுத்துவது ராஜபக்ஷக்களுக்குக் கைவந்த கலையாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்தார்கள், ஜே.வி.பியைப் பிளவுபடுத்தினார்கள். ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்குள்கூட கை வைத்தார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல், ஜனா திபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் என ஹாட்ரிக் வெற்றியுடன் நாடாளுமன்றத்திலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருந்த ராஜபக்ஷக்கள் அணி, தற்போது அரசியல் ரீதியில் வங்குரோத் தடைந்துள்ளது. இந்நிலையில் அரசியல் ரீதியில் தாம் அநாதை களாக்கப்படாமல் இருப்பதற்கு அவர்கள் தீவிரமாகப் போராடி வருகின்றனர்.

ஆனால், ராஜபக்ஷக்கள் ஆட்சி அதிகாரத்தை தக்க வைக்கவும், தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற் காகவும் அவ்வப்போது ஏவிய அரசியல்





அஸ்திரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது ஏவி வரு கின்றார்.

அந்தவகையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்து பயணித்த – கூட்டணி வைத்திருந்த ஏழு பங்காளிக் கட்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வளைத்துப் போட்டுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதாக மேற்படி கட்சிகள் பகிரங்கமாக அறிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி (கருணா), முற்போக்கு தமிழர் கழகம் (வியாழேந்திரன்), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (நிமல் சிறிபாலடி சில்வா அணி) என்பனவே ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளன.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பவற்றின் எம்.பிக்கள் சிலர் கூட ரணிலுடன் இரகசிய உறவு

(04ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பேரங்களையும் ஜன நாயகப் போராடங்களையும் முன்னெ டுத்துப் பெற்றுக்கொள்ளும்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாகச் சர்வதேச சமூகப் பிரதிநிதிகளுடன் நடத்தி வரும் சந்திப்புகள் பற்றி மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி விக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாம் பெறுகின்ற இந்த அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியாக உரிமைகளையும், அவற்றைப் பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென்மேலும் செழு மைப்படுத்த அவசியமான அபிவிருத்தி, வளர்ச்சித் திட்டங்கள், தொழில்நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவப் பகிர்வு ஆகிய உதவிகளையே அமெ ரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது இந்த நிலைப்பாடு, எமக்கு மட்டும் சாதகமானது அல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத் துக்கும் தொல்லை இல்லாமல் சாதகமா னது என நான் மிகத் தெளிவாக நேற்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் தெரி வித்தேன். அதையே நேற்றுமுன் தினம் இலங்கைக்கான ஐ.நா. வதிவிடப் பிரதி நிதி மார்க் அந்திரேவிடமும் கூறினேன்.

உலகம் இன்று மிக வேகமாக மாறி வருகின்றது. உலக ஒழுங்கமைப்பு என்பது பலம் வாய்ந்த நாடுகளின் தேசிய நலன்களின் அடிப்படையிலேயே தீர்மா னிக்கப்படுகின்றது. எமது மக்களின் அரசியல் துன்பங்கள், துயரங்கள் பெரிய நாடுகளுக்குப் பொருட்டாகத் தெரிவ தில்லை. இலங்கை உட்பட ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் தொடர்பாக உலக ஒழுங்கமைப்பு பலம் வாய்ந்த நாடுகளால் தமது நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப் படுகின்றன.

இந்நிலையில், நாம் உலக நாடுகளை அணுகி எமது அரசியல் போராட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவது நேரத்தை வீணடிக்கும் செயற்பாடாகும். இந்நாட்டுப் பிரதிநிதிகளும் இவற்றைப் பொறுமை யாக கேட்கின்றார்களே தவிர எமக்காக அரசியல் போராட்டங்களை அவர்கள் முன்னெடுப்பது கிடையாது. உலக ஒழுங் கமைப்பு மிக வேகமாக இந்த நிலையை நோக்கி நகர்ந்து மாறி விட்டது.

ஆகவே, சர்வதேச சமூகத்திடம் எமது அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தரும் பொறுப்பை நாம் ஒப்படைக்கப் போவ தில்லை. ஆனால், அவர்கள் செய்யக் கூடிய எம்மை நோக்கிய அவர்களின் பொறுப்புகள் சில உள்ளன. நாம் உள்நாட்டில் பெறுகின்ற அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியாக உரிமைகளையும், அவற்றைப் பெற நாம் முன்னெடுக்கும் பயணத்தையும், மென்மேலும் செழுமைப் படுத்தும், அபிவிருத்தி, வளர்ச்சி திட் டங்கள், தொழில் நுட்பம், தகவல் மற்றும் உலகாளாவிய அனுபவ பகிர்வு ஆகிய உதவிகளையே அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்திடம் நாம் எதிர்பார்க் கின்றோம். அவற்றை எப்படிப் பெற வேண்டும் என்பது எமக்குத் தெரியும்.

எமக்கான அரசமைப்பு மற்றும் சட்ட ரீதியான உரிமைகளைப் பெறுவது, அரசமைப்பு திருத்தங்களை மேற் கொள்வது, ஆகியவற்றை மக்கள் ஆணையுடனான எமது அரசியல் பலத்தைப் பயன்படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங்களை முன்னெடுத்துப் பெற்றுக்கொள்வோம். இதுவே எமக்குச் சாத்தியமான கொள்கையாகும். அதற்குரிய அரசியல் பலத்தைத் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு எமது மக்கள் வழங்கியுள்ளார்கள். எதிர்காலத்தில் மிக அதிகமாக வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கூட்டணியின் தலைவர் என்ற முறை யில் நான் ஒரு தூரப் பார்வையுடனேயே இதைக் கூறுகின்றேன். எவ்வளவு அதிக வாக்குகள் எமக்குக் கிடைக்கின்றனவோ, அந்தளவு எமது பலம் உயரும். எமது பலம், எந்தளவு உயர்கின்றதோ, அந்த ளவு எமது அரசியல் பலத்தைப் பயன் படுத்தி, உள்நாட்டில் அரசியல் பேரங் களையும் ஜனநாயகப் போராட்டங் களையும் முன்னெடுத்து நாம் உரிமைகளைப் பெறுவோம்.

நாற்பது வருடங்களாக மலைநாட்டில், தென்னிலங்கையில் குப்பை கொட்டிய பிற்போக்குக் கும்பலை விட பல மடங்கு பணிகளை நாம் 2015 – 2019 வரையான நான்கே வருடங்களில் செய்து காட்டியுள்ளோம். எதிர்காலத்தில் மிக விரைவாக இன்னமும் பல காரியங்களை நாம் செய்யவுள்ளோம். மக்கள் பலமே எமக்கு வேண்டும். எம்மை எதிர்க்கும் உதிரிகளை தேர்தல்களில் தூக்கி வீசி, எமது பலத்தையும், ஆட்சியையும் நாம் நிலைநாட்டுவோம்." – என்றார்.

# விடைபெறுகின்றாரா மஹிந்தர்? நாமல்தான் பிரதமர் வேட்பாளராம்

## ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளர் கூறுகின்றார்

"வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ முன்னின்று தேர்தலையும் அவரே வழிநடத்துவார்."

– இவ்வாறு ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளராகக் கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பிரகாரம் விமல் வீரவன்சவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இப்போது விமல் தரப்பு தனிவழி சென்றாலும் ஜனாதிபதித் தேர்தலில் அவர்களின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கே கிடைக்கப் பெறும்.

வாசுதேவ நாணயக்காரதான் எமது பக்கம் முதலில் வருவார். பின்னர் உதய கம்மன்பிலவுக்கும் வரவேண்டியேற்படும். திலீப் ஜயவீரவும் கோட்டாபய ராஜபக்ஷவுடன்தான் இருக்கின்றார்.



அந்தவகையில் சர்வஜன அதிகாரத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் வந்து, மொட்டுக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவார்கள். இன்னும் இரு வாரங்களில் இது நடக்கும்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கும் என நான் இன்னும் நம்புகின்றேன். அவ்வாறு நடந்தால் தம்மிக்க பெரேரா அல்லது நாமல் ராஜபக்ஷ ஆகியோரில் ஒருவர் கம்பஹா மாவட்டத்தில் களமிறங்குவார்கள். அந்தத் தேர்தலில் மொட்டுக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ முன்னின்று தேர்தலையும் அவரே வழிநடத்துவார்." – என்றார்.

# மாங்குளம் விபத்தில் படுகாயமடைந்த இருவரில் ஒருவர் இன்று உயிரிழப்பு!

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு, மாங்குளத்தில் அண்மையில் இடம்பெற்ற சொகுசு பஸ் – பாரவூர்தி விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 48 வயதான கந்தசாமி கருணாகரன் என்பவரே உயிரிழந்தார்.

மேற்படி நபர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார்.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாகக் கந்தசாமி கருணாகரன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற மாங்குளம் விபத்தால் இதுவரை நால்வர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பஸ் திருத்த வேலை காரணமாக வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், சொகுசு மீது வீதியில் பயணித்த பாரவூர்தி மோதி விபத்துக்குள்ளானது.

விபத்து ஏற்பட்ட நாளில் மூவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயங்களுடன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையிலும், பிரதமர் தினேஷ் குணவர்தனவின் பங்கேற்புடனும் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு விலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜூலை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடவிருப்பதுடன், பி.ப. 5 மணி வரை விவாதத்தை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி அன்றைய தினம் விசேட உரையொன்றை நிகழ்த்தவிருப்பதாகவும் பிரதிச் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜூலை 3ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5 மணி வரை இரண்டாவது நாளாகவும் விவாதத்தை நடத்த இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பி.ப. 5 மணிக்கு தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் கடந்த 26ஆம் திகதி கைச்சாத்திட்ட இறுதி உடன்படிக்கை, இலங்கை அரசு மற்றும் சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி ஆகியவற்றுக்கிடையில் கடந்த 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இறுதி உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனுமதியை, நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.



# மதுசாரம் என நினைத்து விஷத் திரவம் பருகிய மீனவர்களில் நால்வர் மரணம்!

## இருவரின் உடல் நிலை மோசம்

தங்காலை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்காகக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் நால்வர் மதுசாரம் என நினைத்து விஷத் திரவத்தைப் பருகி உயிரிழந்துள்ளனர்.

மேலும், இரண்டு மீனவர்களின் உடல் நிலை மோசமாக இருக்கின்றது என்று கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்தார்.

தங்காலை மீன்பிடித் துறை முகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகை ளுக்காகப் புறப்பட்ட “டெவோன்” என்ற பலநாள் மீன்பிடிக் கப்பலில் இருந்த 6 மீனவர்களே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று தெரி விக்கப்படுகின்றது.

நேற்று இரவு கடலில் மிதந்த போத் தல்களைக் கண்டு மதுசாரம் என நினைத்து அவர்கள் பருகியுள்ளனர்.

குறித்த 6 மீனவர்களும் அதனால் பாதிக்கப்பட்ட நிலையில், இது தொடர் பில் செய்தி அனுப்பும் இயந்திரங்கள் ஊடாக அறிவித்துள்ளனர் என்று கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த சுசந்த கஹவத்த,

“தங்காலை மீன்பிடித் துறை முகத்துக்குப்பணி நிமித்தம் சென்ற ஆறு மீனவர்கள் நேற்று இரவு கடலில் சில போத்தல்கள் மிதப்பதை அடையா ளம் கண்டுள்ளனர். மதுபானம் என நம்பி, அந்தப் போத் தல்களில் இருந்த திரவத்தை இன்று காலை பருகியுள் ளனர் . இதனால் 6 பணியாளர்களும் சுகவீனமடைந் துள்ளனர்.

செய்தி கிடைத்ததன் பின்னர், கப்பல் இருக்கும் இடம் கண்காணிக்கப்பட்டது.

இதுவரை நான்கு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். இருவரின் உடல் நிலை மோசமாக இருக்கின்றது.” – என்றார்.

---

### மொட்டுக் கூட்டை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளனர்.

அதுமட்டுமல்ல மொட்டுக் கட்சியின் பிரிவொன்றையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடைத்தெடுத்துள்ளார். இதனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ரணில் விக்கிரமசிங்க பக்கம் நிற்காத பட்சத்தில் அக்கட்சி மேலும் பிளவடையும் சாத்தியம் காணப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியையும் பிளவு படுத்துவதற்குரிய வேட்டையை ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே ஆரம்பித்து விட்டார். தற்போதைய சூழ்நிலையில் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன ஆகியோர் ரணிலுடனான உறவைப் பகிரங்கப்படுத்தி இருந்தாலும் மேலும் சிலர் திரைமறைவு உறவைப் பேணி வருகின்றனராம்.

அதேவேளை, மொட்டுக் கட்சியுடன் கூட்டணி வைத்திருந்த தேசிய சுதந்திர முன்னணி, பிவிருது ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, யுத்துகம அமைப்பு என்பனவும் மொட்டுத் தரப்பை கைவிட்டு புதிய கூட்டணியை அமைத்துள்ளன.

இதனால் அரசியல் ரீதியில் மொட்டுக் கட்சி தனிமைப்படுத்தப்பட்டுள்ளதால் கூட்டணி அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இதற்கிடையில் ரணில் – ராஜபக்ஷ க்கள் உறவு முறியுமா என்ற கேள்வி எழுகின்றது. இன்னும் அந்தக் கட்டம் வரவில்லையென அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ரணிலுக்கும், ராஜபக்ஷ க்களுக்கும் இடையில் அடுத்த வாரம் தீர்க்கமானதொரு சந்திப்பு நடைபெற வுள்ளது. அந்தச் சந்திப்பின் பின்னரே உறுதியான முடிவுகள் எட்டப்படும்.

நாடாளுமன்றம் ஜூலை 2 ஆம் திகதி கூடுகின்றது. இரு தரப்பு கடன் மறுசீர மைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் சபை யில் முன்வைக்கப்பட்டு, விவாதம் நடத் தப்பட்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்போது பெரும்பாலான உறுப்பி னர்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி முற்படுகின்றார். அதற்கான நகர்வுகளும் ஆரம்பமாகியுள்ளன. எனவே, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரும் முக்கியத்துவமிக்கதாகக் கருதப்படுகின்றது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

# Super Deal of this Week

## Till June 30th



LOWEST PRICE 9.99$ Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE 15.99& Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE 12.99$ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



சூடை

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

***Gunaam's super market canada day***ஐ முன்னிட்டு இந்த வாரம் அள்ளித்தரும் ***super deal.*** அனைத்தும் பலசரக்குப் பொருட்கள், தாயகத்து பழவகைகள், மீன், இறைச்சி அனைத்தும் ***fresh*** ஆகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| Laxmi basmati rice - $12.99 | திரிபோஷா மா - $5.99 |
| Laxmi கைக்குத்தரிசி - $8.99 | MD nelli cordial -$5.99 |
| Laxmi சிவப்பு பச்சை அரிசி -$8.99 | MD sherbet -$5.99 |
| Laxmi முத்துச்சம்பா -$8.99 | MR. Goudas tin milk 3 for - $10.00 |
| Laxmi red நாடு -$8.99 | Lazeez mango juice buy two-$5.99 |
| Priva basmati rice -$7.99 | |
| Atoulfo mango box -$14.99 | இறால் -$3.99 lb |
| Niru parboiled rice -$9.99 | சூடை -$3.99 lb |
| Niru 8lb மைசூர் பருப்பு -$7.99 | சுறாப்பாரை -$7.99 lb |
| Tropic Jaffna curry powder -$11.99 | U5 நண்டு -$19.99 |
| நாட்டுச் சர்க்கரை -$3.99 | காட்டுப்பன்றி -$5.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழர்களைப் புரியாத தெற்கு

வடக்கு, கிழக்கில் உள்ள சகலரும் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர் எனவும் அதைச் செய்வதற்குத் தமிழ் மக்களின் ஆதரவைத் தாம் கோருகின்றார் எனவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஆசிரியர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்ப் பேசும் மக்கள் அதே மொழியில் அரசுடன் பழகும் வாய்ப்பை ஏற்படுத்தி தருவார் எனவும், அவர்களின் மதம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாத்தல் உட்பட அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து விஷயங்களும் செய்து தரப்படும் என்றும் அநுரகுமார உறுதியளித்துள்ளார்.

வழமையான பரவணி சிங்களத் தலைவர்களில் இருந்து அநுரகுமார திஸாநாயக்கவும் வேறுபட்டவர் அல்லர் என்பதையே அவரின் இந்தக் கருத்தியல் எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையின் பிரதான தேசிய இனங்களில் ஒன்றான தமிழர்களைப் பொறுத்தவரை இது பழகிப்போன ஒன்றுதான். சிங்களத் தலைவர்களின் இத்தகைய கருத்தியல் மாறாததுதான்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள், குறிப்பாக தமிழ் பேசும் மக்கள், மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் எதிர்பார்க்கும் - மனம் கொண்டிருக்கும் - தங்கள்அபிலாஷையாகக் கருதும் - மாற்றம் யாது என்பதைப் புரிதலில்தான் தவறு உள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலத்தில் இருந்தே தமிழர்களைத் தவறாகப் புரிந்து கொண்டே அவர்களுக்கான தீர்வுகள் குறித்து சிங்களம் உபதேசித்து வருகிறது.

அதுதான் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை தீராத தலைவலியாக நீடிப்பதற்குப் பிரதான காரணம்.

தமிழர்களின் தேவை - எதிர்பார்ப்பு - என்ன என்பதை நீதி, நியாயத்துடன் அணுகிப் பார்ப்பதற்கு எந்தச் சிங்கள தலைவரும் தயார் இல்லை. அதுதான் இங்கு பிரச்சினை.

தாம் நீதி, நியாயம் என்று உரைப்பதை தமிழர்களும் தமக்கான நீதி, நியாயமாக ஏற்றுக்கொண்டு அடங்கிப் போக வேண்டும் என்பதுதான் இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்களின் காலாதி கால நிலைப்பாடாக இருந்து வருகிறது. அதில் மாற்றம் ஏதும் இல்லை. அதுதான் விசனத்துக்குரியது.

தென்னிலங்கையில் பேரினத்தவர்களான பௌத்த - சிங்களவர்களுக்கு உள்ள மத உரிமை, மொழி உரிமை உட்பட அனைத்து வாழ்வியல் உரிமைகளும் வடக்குக் கிழக்குத் தமிழர்களுக்கும் உண்டு. அதை உறுதி செய்வோம். அதைத் தீர்வாக - நீதியாக- நியாயமாக - ஏற்றுக்கொண்டு தமிழர்கள் வாழ வேண்டியதுதானே என்பது தென்னிலங்கையின் மாறா நிலைப்பாடாக இருந்து வருகின்றது. இதையே ஜே.ஆர்.ஜெயவர்த்தனவிலிருந்து இன்று வரையான சிங்களத் தலைவர்கள் எல்லோரும் போதித்து, உபதேசித்து வருகின்றனர்.

புலிகள் உட்பட தமிழர்களின் இன்று வரையான தலைவர்கள் இந்த நீதியான தீர்வுக்கு உடன்பட்டு வருகின்றார்கள் இல்லை என்பது தென் இலங்கையின் தொடர் குற்றச்சாட்டு.

மேலோட்டமாகப் பார்த்தால் தென்னிலங்கை உரைக்கும் அந்த நீதி கூட நியாயமானது போல தோன்றலாம்.

ஆனால், தமிழர்கள் எதிர்பார்ப்பது இந்த 'சமத்துவ நீதி'யை அல்ல. அவர்கள் சரித்திர ரீதியான தங்கள் உரித்தின் அடிப்படையிலான நீதியையே எதிர்பார்க்கின்றார்கள். அந்த நீதிக்கான மாற்றத்திற்காகவே அவர்கள் காத்திருக்கின்றனர்.

அவர்கள் எதிர்பார்க்கும் மாற்றம் தென்னிலங்கைத் தலைவர்கள் கூறும் இந்த மாற்றம் அல்ல.

சரித்திர காலம் தொட்டு தமது பூர்வீகத் தாயகத்தில் தங்களின் தனித்துவமான மொழி, பண்பாடு, பழக்கவழக்கம், வழக்காறுகள், வாழ்க்கை முறைகள், இனக் கட்டமைப்பு, மத நம்பிக்கைகளுடன் ஒரு தனித்துவமான தேசக் கட்டமைப்பாக ஒன்றித்துத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

அந்த இனக்கட்டமைப்பை குழப்பாமல் பேணிப் பாதுகாக்கும் நடைமுறையை உறுதிப்படுத்துகின்ற ஒரு நியாயத் தீர்வையே அவர்கள் வேண்டி நிற்கின்றனர்.

தென்னிலங்கையில் உள்ள பௌத்த - சிங்களவர்களுக்கான அடிப்படை உரிமைகள் தங்களுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல தமிழர்களின் கோரிக்கை. அதையும் தாண்டி, தென் இலங்கையர்கள் போல தங்கள் மொழி, இனம், தாயகம், வாழ்க்கை முறைகளைத் தாங்களே பாதுகாத்துப் பேணுவதை உறுதிப்படுத்தும் ஒரு கட்டமைப்பு ரீதியான ஏற்பாட்டைத்தான் அவர்கள் தீர்வாக வலியுறுத்துகின்றார்கள்.

அநுரகுமார திஸாநாயக்க உட்பட தென்னிலங்கை தலைவர்களுக்கு அது இன்னும் புரிந்ததாக தெரியவில்லை.




# மன்னாரில் பாடசாலை மாணவர்கள் 8 பேர் வைத்தியசாலையில் அனுமதி

**(மன்னார் நிருபர்)**

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் தரம் 4 ஐச் சேர்ந்த மாணவர்கள் 8 பேர் திடீர் சுகயீனம் காரணமாக நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 4 இல் கல்வி கற்கும் 9 வயதுடைய 8 மாணவர்கள் இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் தனது வீட்டில் எண்ணை எடுப்பதற்காக காய வைத்திருந்த ஆமணக்கு விதைகளை பாடசாலைக்கு கொண்டு வந்து சக மாணவர்களுடன் இணைந்து அதை உட்கொண்ட நிலையிலே இந்த மாணவர்கள் திடீர் சுகயீனமடைந்து உள்ளனர் என தெரிய வருகிறது.

இந்த நிலையில், மேற்படி 8 மாணவர்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# கணனிக் கற்கை மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை


**(த.சுபேசன்)**

என் கனவு யாழ். அக்கடமி ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச கோடிங் கணணிப் பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்களுக்கான முதற்கட்ட சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தொழில்நுட்ப உலகை எதிர்கால சந்ததியினர் வெற்றி கொள்ள வழி காட்டும் விதத்தில் டி.பி. எடியுகேஷன் அறக்கட்டளை நிறுவனரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேரா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோருடைய முயற்சியால் யாழ். மாவட்டத்தின் 8 பிரதேசங்களில் முற்றுமுழுதாக இலவசமாக முன்னெடுக்கப்படும் கோடிங் கணணிக் கற்கை நெறியின் முதற் பாகத்தை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வே இவ்வாறு கோலாகலமாக இடம்பெறவுள்ளது.

மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தம்மிக்க பெரேரா மற்றும் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் கோடிங் கற்கையின் முதல் பாகத்தை பூர்த்தி செய்த சுமார் மூவாயிரம் மாணவர்கள் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA







# சன்னதி பாதயாத்திரீகர்கள் உகந்தையில் ஓய்வெடுத்தனர்



(வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச் சன்னதி ஆலயத்தில் இருந்து கடந்த 52 நாள்களாக பயணித்த ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இரண்டு நாள்கள் ஓய்வெடுப்பதை படங்களில் காணலாம்.







# பாலித ரங்கே பண்டாரவின் மகன் கருவலகஸ்வெவ பொலிஸாரால் கைது

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கருவலகஸ்வெவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் செலுத்திய கார் இன்று அதிகாலை விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கார் வீதியை விட்டு விலகி முச்சக்கர வண்டி ஒன்றுடன் மோதியே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது காயமடைந்த முச்சக்கரவண்டியின் சாரதி புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.






# நெடுந்தீவில் நடமாடும் சேவையும் சட்ட ஆலோசனை முகாம் நிகழ்வும்







(த.சுபேசன்)

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துடன் இணைந்து கடந்த புதன்கிழமை நெடுந்தீவில் இலவச நடமாடும் சேவை மற்றும் இலவச சட்ட ஆலோசனை முகாம் சேவைகளை முன்னெடுத்திருந்தது.


நெடுந்தீவுப் பிரதேச செயலர் திருமதி நிவேதிகா கேதீசன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுகளில் சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் பணிப்பாளரும். சட்டத்தரணியுமான திருமதி அம்பிகா சிறிதரன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கியிருந்தார்.

மேலும் நெடுந்தீவுப் பிரதேசத்தில் நீண்ட காலம் அடையாள அட்டை இன்றிக் காணப்பட்ட 65 பொதுமக்கள் மேற்படி நடமாடும் சேவை ஊடாக பொலிஸ் அறிக்கை, சமாதான நீதவானின் சிபாரிசு உள்ளிட்ட சேவைகளுடன் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இந்த நிகழ்வில் நெடுந்தீவுப் பிரதேச கணக்காளர், சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,நெடுந்தீவுப் பொலிஸார், சமாதான நீதவான் ஆகியோரும் பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கியிருந்தனர்.






Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555

# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தது

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 84 ஆயிரத்து 383 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து 22 ஆயிரத்து 629 பேரும், பிரித்தானியாவிலிருந்து 6 ஆயிரத்து 730 பேரும், சீனாவிலிருந்து 6 ஆயிரத்து 227 பேரும் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளனர்.

இந்த வருட ஆரம்பம் முதல் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 9 லட்சத்து 81 ஆயிரத்து 162 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபராக எம்.எஸ்.எம். பைசால் நியமனம்



**(பாறுக் ஷிஹான்)**

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் புதிய அதிபராக எம்.எஸ்.எம். பைசால் நேற்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த 13 ஆம் திகதி கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ.ஜி திசாநாயக்க தலைமையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் படி எம்.எஸ்.எம். பைசால் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியமன கடிதத்தினை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். ச/ஹதுல் நஜீம் நேற்று முன்தினம் வலயக்கல்வி பணிமனையில் வைத்து கையளித்திருந்தார்.

பாடசாலையின் பிரதி அதிபர் எம்.பி.ஏ.றாஜி, பழைய மாணவர் சங்க பிரதி தலைவர் எம்.எஸ். உமர் அலி ஆகியோர் மாலையிட்டு புதிய அதிபரினை வரவேற்றனர்.

இந்த வைபவத்தில், புதிய அதிபரின் குடும்பத்தினர், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் ஆசிரிய குழாம், அல் ஹிக்மா கனிஷ்ட பாடசாலையின் அதிபர் எம்.எல்.எம். மஹ்ரூப், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவ சங்க செயலாளர் சுஹைறல் ஜமால்தீன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் பி.எம். அறபாத், ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவ சங்க பிரதிநிதிகள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், ஷம்ஸ் மத்திய கல்லூரி நலன் விரும்பிகள், அல் பஹ்ரியா பாடசாலையின் புதிய அதிபர் எம். அப்துல் சலாம், அல் பஹ்ரியா பாடசாலையின் நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.







# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம் ஜனாதிபதி சுற்றாடல் விருதை பெற்றது

( வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சுற்றாடல் போட்டியில் அரச நிறுவனங்களுக்கான பிரிவில் பங்குபற்றி 'வெள்ளி விருதினை' பெற்றுக்கொண்டது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் மேற்படி விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் இவ்விருதை கௌரவ அதிதியான சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

நாடாளவிய ரீதியில் அரச நிறுவனங்கள், பாடசாலைகள், பொது அமைப்புக்கள் என 902 பேர் விண்ணப்பத்திருந்த நிலையில், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம் அவற்றுக்குள் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.












# கார்மேல் பற்றிமாவில் அதிபர் தினம் நிகழ்வு

( வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ் பெற்ற கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் தின நிகழ்வு வெகு சிறப்பாக நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இந்த விழாவில் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

விழாவில் பிரதி அதிபர்கள், உப அதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் அதிபரினது சேவை சிறப்பாக தொடர்வதற்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் அவர்கள் தெரிவித்தனர்.















# கல்முனை, சம்மாந்துறை வைத்தியசாலைகளுக்கு ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் வழங்கப்பட்டன

**(வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைகளுக்கு ஜனாதிபதி சுற்றாடல் வெள்ளிப் பதக்க விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கி கௌரவிக்கும் விழா நேற்று கொழும்பு வி.எம்.ஐ.சி.எச். மண்டபத்தில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து சிறப்பித்தார்.

'பாதுகாக்கப்பட்ட புவியை பேணுவதற்கு ஒன்றிணைவோமாக' என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழாவில் கல்முனை ஆதாரவைத்தியசாலை மற்றும் சம்மாந்துறை ஆதாரவைத்தியசாலை ஆகிய இரு வைத்தியசாலைகளுக்கு வெள்ளி பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் மேற்படி இரண்டு வைத்தியசாலைகளுக்கும் மாத்திரமே இந்த வெள்ளி விருது கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது .

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை சார்பில் அதன் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் தர்மலிங்கம் பிரபாசங்கர் அந்த விருதினை பெற்றுக் கொண்டார் .

கல்முனை ஆதார வைத்தியசாலை சார்பில் அதன் பணிப்பாளர் டாக்டர் ஏ.பி. ஆர்.எஸ். சந்திரசேன அவ்விருதினைப் பெற்றுக் கொண்டார்.

வைபவத்தில் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்களான சதாசிவம் வியாழேந்திரன் ஜானக வக்குர உள்ளிட்ட மத்திய சுற்றாடல் அதிகாரி சபை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

# ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தராக இர்பான் நியமனம்

**(எம்.எச்.எம் சியாஜ்)**

புத்தளம் ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தராக அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். இர்பான் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

புத்தளம் ஆசிரியர் வாண்மைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் எம்.எப்.எம் நியாஸிடம் தனது நியமன கடிதத்தை ஒப்படைத்து கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட இர்பான், புத்தளம் ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரும், ஜாமி ஆ நளீமிய்யா, பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பட்டதாரியும் ஆவார்.



கடந்த காலங்களில் புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியில் ஆசிரியராகவும், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் பகுதித் தலைவராகவும், முகாமைத்துவ குழுவின் செயலாளராகவும் செயற்பட்டுள்ள இவர் புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் பொது நிர்வாகப் பகுதி, ஆசிரியர் ஸ்தாபனப் பகுதி, கணக்குப் பகுதிகளில் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கள்ளச் சாராயம் விற்றால் ஆயுள் தண்டனை; 10 லட்சம் ரூபா அபராதம், மசோதா தாக்கல்

கள்ளச்சாராயம் தயாரித்து, விற்றால் ஆயுள் தண்டனை வழங்கவும், 10 லட்சம் ரூபா அபராதம் விதிக்கவும் வழிவகை செய்து மதுவிலக்கு சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் மசோதா தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

தமிழக சட்டசபை பேரவைக் கூட்டம் கடந்த 20 ஆம் திகதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு தீர்மானங்கள், சட்ட மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், சட்டப் பேரவை கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்று பல்வேறு முக்கிய அறிவிப்பாக கள்ளச் சாராய விற்பனைக்கு தண்டனையை கடுமையாக்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுவிலக்கு திருத்தச் சட்ட மசோதாவை அமைச்சர் முத்துசாமி சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 ஐ திருத்தம் செய்யும் வகையில் மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

கள்ளச் சாராயத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில் கடுமையான தண்டனை வழங்கும் வகையில் கள்ளச் சாராயம் விற்றால் ஆயுள் தண்டனையுடன் 10 லட்சம் ரூபா அபராதம் விதிக்கும் வகையில் சட்டம் கடுமையாக்கப்படுவதாக மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து, பொலிஸ், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்துக்கு மு.க.ஸ்டாலின் அளித்த பதிலுரையில்,

“நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றியைப் பெற்ற பெருமிதத்துடன் இந்தப் பேரவைக்கு நாங்கள் வருந்துள்ளோம். நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவில் நூற்றுக்கு நூறு வெற்றியைப் பெற்று புகழ் மாலையைச் சூட்ட வேண்டும் என்று நான் உறுதி எடுத்து பயணம் தொடங்கினேன். எடுத்த உறுதியில் வென்று நூற்றாண்டு நாயகருக்கு புகழ்மாலை சூட்டிய பெருமையோடு உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன்.

நடைபெற்றது நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், எதிர்க்கட்சிகள் என்னைக் குறி வைத்தும், இந்த திராவிட மாதிரி அரசை விமர்சித்தும்தான் தேர்தல் களத்தில் அதிகம் பேசினார்கள். திராவிட மாடல் ஆட்சியின் செல்வாக்கைக் குறைத்துக்காட்ட அவர்கள் செய்த உண்மைக்குப் புறம்பான பிரச்சாரங்களை மக்கள் முறியடித்து, “செய்கூலி சேதாரம் இல்லாமல்“ முழுமையான வெற்றியை வழங்கினார்கள். ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையையேஇந்ததேர்தல்முடிவுகள்காட்டுகின்றன.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற காலம் முதல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வந்துள்ளேன் என்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்ததன் அடையாளம்தான் இந்த 100 வீதம் வெற்றி.

சட்டமன்றத் தேர்தலில், ‘வாக்களித்த மக்கள் – வாக்களிக்காத மக்கள்’ என்ற பாகுபாடின்றி, அனைவருக்கும் கடந்த மூன்றாண்டு காலத்தில் ஏராளமான நன்மைகளைச் செய்துள்ளோம். அதற்கான அங்கீகாரத்தை வாக்குகள் மூலமாக மக்கள் நமக்கு அளித்துள்ளார்கள். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நின்று, வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் இரண்டாண்டு காலமும் இதே போன்ற ஈடு இணையற்ற திட்டங்களைத் தீட்டித் தந்து, 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றியை நாங்கள் பெறுவோம். இதனை மமதையோடு நான் சொல்லவில்லை மனச்சாட்சிப் படி செயல்படும் இந்த ஸ்டாலின் மீதும் திராவிட மாடல் அரசின் மீதும் மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில் துணிச்சலோடு சொல்கிறேன்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக ஆய்வு செய்தால், திமுக கூட்டணி 221 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளது.

மக்கள் மனதில் யார் இருக்கிறார்கள்? யாரை மக்கள் அடியோடு புறக்கணித்து உள்ளார்கள்? என்பதையெல்லாம் இதன் மூலம் உணர முடியும். அதனால்தான், மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள், நமது முகத்தை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல், தினந்தோறும் இந்த அவைக்கு வந்து, அவையின் மாண்புக்கும் குந்தகம் விளைவித்து சென்றுவிட்டார்கள்.

இந்தத் தேர்தல் தோல்வியை மறைக்க அவர்கள் போட்ட சதித்திட்டம்தான், நடவடிக்கை எடுக்கப்பட்ட கள்ளக்குறிச்சி விவகாரத்தை தொடர்ந்து கிளப்பியது.

கடந்த 19 ஆம் திகதி இந்த சம்பவத்தை நான் கேள்விப்பட்டதும் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய சிகிச்சை அளிக்க உத்தரவிட்டேன். அது குறித்து இதே அவையில் 20 ஆம் திகதி முழுமையான அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன்.”– என்றார்.



# பட்டாசு ஆலையில் வெடிவிபத்து: தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழப்பு

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே இன்று காலை பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

சாத்தூர் அருகே உள்ள பந்துவார்பட்டியல் சகாதேவன் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று இயங்கி வருகிறது. மாவட்ட வருவாய் அலுவலரின் உரிமம் பெற்று இயங்கும் இந்தப் பட்டாசு ஆலையில் 10 இற்கும் மேற்பட்ட அறைகளில் பட்டாசு தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இன்று காலை வழக்கம் போல் பட்டாசு ஆலையில் உற்பத்தி தொடங்கியது. 30 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கு சென்றுள்ளனர்.

வழக்கம்போல் பட்டாசு தயாரிப்பதற்கான மூலப் பொருள்களை கலவை செய்தபோது உராய்வு ஏற்பட்டு திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் மூன்று அறைகள் இடிந்து சேதமடைந்தன. அந்த அறைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த பட்டாசு தொழிலாளர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

தகவல் அறிந்த சாத்தூர் தாலுகா பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தோர் ராஜ்குமார், மாரிச்சாமி, மோகன், செல்வக்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதற்கிடையில், விருதுநகர் பட்டாசு விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபா முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.





# காசாவின் ஷுஜேயா பகுதியிலிருந்து 6 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்தனர்



இஸ்ரேலின் தரைவழித்தாக்குதலினை தொடர்ந்து காசாவின் ஷுஜேயா பகுதியில் 6 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசாவில் உள்ள குடியிருப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினைத் தொடர்ந்து ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், அந்தத் தாக்குதலில் 15 பேர் வரை காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# போர் ஆயுதங்களை வெற்றிகரமாக சோதனை நடத்தியது வடகொரியா

முக்கிய போர் ஆயுதங்களை வட கொரியா வெற்றிகரமாகச் சோதனை நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரிய அரச ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

எனினும் வடகொரியா சோதனையில் தோல்வியடைந்துள்ளதாக தென் கொரியா தெரிவித்துள்ளது.

இது சர்வதேசத்தை ஏமாற்றும் செயற்பாடு எனவும் வடகொரியா மிகைப்படுத்தி கருத்துக்களை வெளியிடுவதாகவும் தென்கொரியா குறிப்பிட்டுள்ளது.

வடகொரியாவின் சோதனை நடவடிக்கைகள் வெற்றியளிக்குமாயின் அது சர்வதேசத் தடைகளுக்கு மத்தியில் ஆயுத மேம்பாட்டை முன்னோக்கிக் கொண்டு சென்றுள்ளமையைக் குறிக்கும்.

அதேநேரம் வடகொரியா நீண்ட தூரம் தாக்குதல் நடத்தக்கூடிய ஏவுகணைகளையும் பல போர்க் கப்பல்களையும் சோதனை நடத்துவதாக சில தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் சர்வதேசத் தடைகள் காரணமாக வடகொரியாவினால் முன்னோக்கிச் செல்ல முடியாது என தென்கொரியா தெரிவித்துள்ளது.

# சீனாவுக்கு செல்ல வேண்டாம்; தாய்வான் பகிரங்க எச்சரிக்கை

சீனா மற்றும் அதன் தன்னாட்சி பிராந்தியங்களான ஹொங்கொங், மக்காவோ ஆகிய பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கும்படி தாய்வான் நாட்டினருக்கு அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தாய்வான் நாட்டைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் சீனாவில் வசித்து வரும் நிலையில் இரு நாடுகள் இடையே தினமும் நேரடி விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில், தைவான் அரசின் இந்த அறிவிப்பு அங்குள்ள மக்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து தாய்வான் 1949-ம் ஆண்டு தனி நாடாக பிரிந்தது. ஆனால் சமீப காலமாக தாய்வானை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா முயற்சிக்கிறது.

மேலும் தாய்வானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைத்துக் கொள்ளக்கூடாது எனவும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையே தைவான் எல்லையில் போர் விமானங்கள் மற்றும் கப்பலை அனுப்பி சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது.

மேலும் தைவான் ஜனநாயகத்தை ஆதரித்து வருபவர்களை தூக்கிலிடுமாறு வலியுறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.



கனடா முரசு
பக்கங்கள் 06
சனிக்கிழமை 29/06/2024

## ஹெமில்டனில் சூடு ஒருவருக்குக் காயம்

ஒன்ராரியோ, ஜூன் 29
ஹெமில்டனின் டவுன்டவுன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கடும் காயமடைந்துள்ளார்.
கிங் மற்றும் மெக்னெப் C2



# ட்ரூடோ பதவி விலக வேண்டிய நேரம் வந்துவிட்டது லிபரல் கட்சியின் முன்னாள் அமைச்சர் கூறுகின்றார்

**ஒன்ராரியோ, ஜூன் 29**
**ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டிய நேரம் வந்துவிட்டதாக என லிபரல் கட்சியின் முன்னாள் அமைச்சர் கெத்தரீன் மெக்கென்னா தெரிவித்துள்ளார்.**
**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் அமைச்சரவையில் முன்னாள் சுற்றுச்சூழல் அமைச்சராக கெத்தரீன் மெக்கென்னா இருந்தார்.**

லிபரல் கட்சி புதிய தலைவர் ஒருவரைக் கண்டுபிடிக்க வேண்டிய நேரம் இதுவென அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்த வாரம் டொரன்டோ-சென் போல்ஸ் தொகுதி இடைத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் டொன் ஸ்டுவர்ட் வெற்றி பெற்றார்.
இந்தத் தோல்வியின் பின்னர் ஜஸ்டின் ட்ரூடோவின் பதவி குறித்த பல கேள்விகள் எழுந்துள்ளன.
2015 முதல் 2021 வரை ஜஸ்டின் ட்ரூடோ அமைச்சரவையில் கெத்தரீன் மெக்கென்னா உயர் அமைச்சர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தலைவர் பதவியில் இருந்து ட்ரூடோவை விலகக் கோரும் எம்.பி.

ஒன்ராரியோ, ஜூன் 29
அடுத்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாதிருக்க தீர்மானித்துள்ள லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலகக் கோரி சக லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்.
லிபரல் கட்சியினரின் வலுவான கோட்டையாக கருதப்படும் டொராண்டோ சென்ட்-போல்ஸ் தொகுதியை இழந்த பிறகு, லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பதற்றம் அதிகரித்துள்ளது.
ஆங்கில இணையத்தளமான கனடியன் பிரஸ் மூலம் பெறப்பட்ட மின்னஞ்சலில், நியூ பிரன்சுவிக் நாடாளுமன்ற உறுப்பினர் வெய்ன் லாங், கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் இந்த மின்னஞ்சலை அனுப்பியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.
கட்சியின் எதிர்காலத்திற்காகவும், நாட்டின் நலனுக்காகவும் லிபரல் கட்சிக்கு புதிய தலைமையும் வழிகாட்டுதலும் தேவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஒரு சில லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் ட்ரூடோ விலக வேண்டும் என்று நினைக்கின்ற போதிலும், பல அமைச்சரவை உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு பெரிய குழு பிரதமருக்கு பகிரங்கமாக ஆதரவளித்துள்ளது.



# முற்போக்குக் கன்சர்வேட்டிவிலிருந்து மாகாண சபை உறுப்பினருக்கு கல்தா!

ஒன்ராரியோ, ஜூன் 29

ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் கோல்டி கமாரி முற்போக்குக் கன்சர்வேட்டிவ் கட்சியில் மாகாண சபை குழுவில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கட்சியின் மாகாண சபை குழுவில் இருந்து அவர் விலக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் கோல்டி கமாரி, இங்கிலாந்தின் தீவிர வலதுசாரி ஆர்வலர் டொமி ரொபின்சனுடனான தமது சந்திப்புப் படத்தை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து முற்போக்குக் கன்சர்வேட்டிவ் கட்சியில் மாகாண சபை குழுவில் இருந்து கோல்டி கமாரி விலக்கப்பட வேண்டும் என கனடிய முஸ்லிம்கள் தேசிய சபை வலியுறுத்தியிருந்தது.

ஆனாலும் இந்த சந்திப்பின் முன்னர், டொமி ரொபின்சனின் பின்னணி குறித்து தான் அறிந்திருக்கவில்லை என கோல்டி கமாரி கூறியிருந்தார்.

2018 முதல் கார்ல்டன் தொகுதியை முற்போக்குக் கன்சர்வேட்டிவ் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக கோல்டி கமாரி பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார்.

# நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி ஏப்ரலில் 0.3 வீதத்தினால் உயர்வு

கனடிய பொருளாதாரத்தில் சாதக நிலைமை பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது.

ஏப்ரல் மாத மொத்த தேசிய உற்பத்தி 0.3 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய புள்ளிவிவரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது.

மொத்த விற்பனை வர்த்தகம், எண்ணெய் மற்றும் வாயு அகழ்வு மற்றும் உற்பத்தி துறைகளில் ஏற்பட்ட சாதக நிலைமையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது.




## ஹெமில்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளுக்கு இடையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒரு சந்தேக நபர் 20 வயதான கறுப்பினத்தவர் எனவும், பச்சைநிற ஆடையும், கறுப்பு அல்லது சாம்பல் நிற முதுகுப் பையை அணிந்திருந்தார் எனவும், மற்றைய வெள்ளையினத்தவர் சாம்பல் நிற ஆடை அணிந்திருந்தார் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமுற்ற நபர் கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.






# வெளிநாட்டுப் பணியாளர்கள் அதிக அளவில் நிரந்தர வதிவிட உரிமையாளர்களாகின்றனர்

## கனடியப் புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 29

கனடாவில் வெளிநாட்டு பணியாளர்கள் அதிக அளவில் நிரந்தர வதிவிட உரிமையாளர்களாக மாறுகின்றனர் என கனடியப் புள்ளி விவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையானோர் வதிவுரிமை அந்தஸ்தினை பெற்றுக் கொள்கின்றமை தொடர்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளாக இந்த நிலை காணப்படுவதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 23 வீதமான வெளிநாட்டு பணியாளர்கள் நிரந்தர வதிவுரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக முதலாவது தொழில் உரிமத்தை பெற்றுக்கொண்டு இரண்டு ஆண்டுகளில் இவ்வாறு நிரந்தர வதிவுரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை 2011 முதல் 2015 ஆம் ஆண்டில் 12 வீதமாக காணப்பட்டது.

இதன்படி தற்காலிகமாக கனடாவில் வதிவோர் கூடுதல் எண்ணிக்கையில் நிரந்தர வதிவுரிமையை பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய ஆண்டுகளில் வெளிநாட்டு பணியாளர்கள் மற்றும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரையில் 2.8 மில்லியன் தற்காலிக வதிவிட உரிமையாளர்கள் கனடாவில் வசித்து வருவதாகவும் இது மொத்த சனத்தொகையின் 6.8 வீதம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆப்கானில் கனேடிய ஆயுதப் படைகள் ‘சட்ட உத்தரவுகளை’ பின்பற்றினவாம்!

## படைகளின் பிரதானி விளக்கம்

ஒன்ராரியோ, ஜூன் 29

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காபூல் வீழ்ச்சியின் போது ஆப்கானிஸ்தான் சீக்கியர்களின் குழுவை மீட்க முயன்றபோது கனேடிய ஆயுதப் படைகள் ‘சட்ட உத்தரவுகளை’ பின்பற்றின எனப் பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஜெனரல் வெய்ன் ஐர் குறிப்பிட்டுள்ளார்.

ஒகஸ்ட் 2021இல் ஆயிரக்கணக்கானோருடன் சிக்கிக் கொண்ட சுமார் 200 ஆப்கானிய சீக்கியர்கள் குழுவின் சார்பாக தலையிடுவதற்கான தனது முடிவை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஹர்ஜித் சஜ்ஜன் விளக்கியபோது ஐரின் கருத்து வெளிவந்துள்ளது.

சஜ்ஜன் ஓர் அறிக்கையில், குழுவின் இருப்பிடம் குறித்து தனக்கு வழங்கப்பட்ட தகவலை ‘பொருத்தமான’ சனல்கள் மூலம் அனுப்பினார் எனவும், அவ்வாறு செய்வது ஆப்கானிஸ்தானில் உள்ள பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உதவுவதற்கான அரசாங்கக் கொள்கைக்கு இணங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

முந்தைய நடவடிக்கைகளின் போது கனேடிய வீரர்களுக்கு உதவிய கனேடியர்கள் அல்லது ஆப்கானிஸ்தான் மொழிபெயர்ப்பாளர்களை விட இந்தக் குழுவை முதன்மைப்படுத்துமாறு படைகளுக்கு தான் அறிவுறுத்தவில்லை என்று சஜ்ஜன் தெரிவித்திருந்தார்.



செய்தி இணையத்தளமான தி கனடியன் பிரஸ்ஸுக்கு அளித்த பேட்டியில், ஆப்கானிஸ்தான் சீக்கியர்களின் குழுவிற்கு குறிப்பாக உதவ இராணுவம் ஒரு முயற்சியை மேற்கொண்டபோது இராணுவம் ‘சட்ட உத்தரவுகளை’ பின்பற்றுவதாக அவர் கூறியிருந்தார்.



# பிறைட் நிகழ்வுகளில் பங்குபற்றுவாரா? பொய்லியேவ் தரப்பில் பதில் இல்லை!

ஒன்ராரியோ, ஜூன் 29-
இந்த கோடை காலத்தில் பிறைட் நிகழ்வுகளில் தங்கள் தலைவர் பங்கேற்க விரும்புகிறாரா என்ற கேள்விகளுக்கு பதிலளிக்காத ஒரே நாடாளுமன்ற கட்சியின் தலைவராக கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ் உள்ளார்.

ஒருபாலின உறவுகளை விரும்பும் LGBTQIA+ சமூகத்தின் கொண்டாட்டமே இந்த பிறைட் நிகழ்வுகள்.

பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ, புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங், புளொக் கியூபெக் தலைவர் யிவெஸ் பிரான்சுவா பிளாங்கெட் மற்றும் பசுமைக் கட்சித் தலைவர் எலிசபெத் மே ஆகியோர் பிறைட் நிகழ்வுகளில் கலந்துகொள்வது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதே கேள்விக்கு பதிலளித்துள்ள கன்சர்வேட்டிவ் கட்சியானது, கட்சியின் துணைத் தலைவர் ஜூன் மாத ஆரம்பத்தில் நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற பிறைட் கொடியேற்ற நிகழ்வில் கலந்துகொண்டார் எனக் குறிப்பிட்டுள்ளது.

# குடியேற்றவாசிகள் தொடர்ந்தும் அதிகரித்தால் கியூபெக் மக்களின் நடத்தையில் மாற்றம் வரும்

## மாகாண முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் தெரிவிப்பு



கியூபெக், ஜூன் 29
கியூபெக் மாகாணமானது குடியேற்றவாசிகளை தொடர்ந்து அதிகரித்த அளவில் அனுமதிக்குமாயின் புதிதாக வருபவர்கள் தொடர்பில் மாறுபட்ட நடத்தைகளை மக்கள் வெளிப்படுத்தக் கூடும் என மாகாண முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் தெரிவித்துள்ளார்.

குடிவரவு தொடர்பான விவாதங்கள் பயங்கரவாத கருத்துக்களாக மாற்றம் பெறும் அமெரிக்காவைப் போன்றோ அல்லது பிரான்ஸைப் போன்றோ மாறுவதனை தாம் விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களில் கியூபெக்கில் 300,000 நிரந்தர வதிவிடமல்லாதவர்கள் இருக்கின்றனர் என அண்மைய தரவுகள் தெரிவிக்கின்றன.

இது மாகாணத்தின் தாங்கும் அளவினை விட மிக அதிகமானது என முதல்வர் கூறியுள்ளார்.

இதன் விளைவாக சேவைகள், பிரெஞ்சு மொழி மற்றும் வீடமைப்பு என்பன தொடர்பில் பல தாக்கங்கள் எதிர்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# நயாகரா நீர்வீழ்ச்சிக்குள் குதித்து உயிரை மாய்த்த இந்திய இளைஞர்

இந்திய இளைஞர் ஒருவர் நயாகரா நீர்வீழ்ச்சியில் குதித்து தன் உயிரை மாய்த்துக்கொண்டார் எனக் கனடா பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

சரன்தீப் சிங் (வயது22) என்னும் இளைஞர் கனடாவிலுள்ள பிராம்ப்டனில் தங்கி வேலை செய்துவந்த நிலையில், இந்தியாவின் பஞ்சாபிலுள்ள Abbuwal என்னும் கிராமத்திலுள்ள அவரது வீட்டுக்கு ஒரு நண்பர் வந்துள்ளார்.

அவர், சரன்தீப்பின் தந்தையான ஜோரா சிங்கிடம், கடைசியாக உங்கள் மகனிடம் எப்போது பேசினீர்கள் என்று கேட்க, அவர் மகனை மொபைலில் அழைத்துள்ளார்.

சரன்தீப்பின் மொபைல் சுவிட்ச் ஓவ் செய்யப்பட்டிருக்கவே, அவர் சரன்தீப்புடன் தங்கியிருந்த நண்பர் ஒருவரை அழைத்து விசாரிக்க, அந்த நண்பர், சரன்தீப் கடந்த வியாழனன்று நயாகரா நீர்வீழ்ச்சிக்கு சென்றார் எனவும், அதற்குப்பின் வேலைக்கு செல்வார் எனக் கூறினார் எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், சரன்தீப் தான் தங்கியிருந்த அறைக்குத் திரும்பவேயில்லை.

ஆகவே, சரன்தீப்பின் மாமா, நயாகரா நீர்வீழ்ச்சி பொலிஸாரைத் தொடர்பு கொண்டு அவரைக் காணவில்லை என புகாரளித்துள்ளார்.

ஆனால், அவர்கள் அவருக்கு அதிர்ச்சி தரும் செய்தி ஒன்றைக் கூறியுள்ளார்கள். ஆம், சரன்தீப் நயாகரா நீர்வீழ்ச்சியில் குதித்து, தன் உயிரைத் தானே மாய்த்துக்கொண்டார் எனவும், அவர் தன் மொபைலை கீழே வைத்துவிட்டு நீர்வீழ்ச்சியில் குதிக்கும் காட்சிகள் சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தகவலறிந்து சரன்தீப்பின் குடும்பத்தினர் கண்ணீர் வடித்துவரும் நிலையில், சரன்தீப்புடன் முன்பு வேலை செய்த நான்கு இளைஞர்கள் அவருக்குத் தொந்தரவு கொடுத்துவந்தனர் என அவர் தன்னிடம் கூறினார் எனத் தெரிவித்த சரன்தீப்பின் தாயான பிந்தர் கௌர், தன் மகனுடைய மரணம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று கனடா பொலிஸாரைக் கேட்டுக்கொண்டுள்ளார்.






# கொவிட் காலத்தில் கோட்டை விட்டதை மீட்க கனடிய வருமான முகவர் நிறுவனம் தீவிர முயற்சி

கொவிட் காலத்தில் கூடுதலாக வழங்கப்பட்ட நலன்புரித் திட்டக் கொடுப்பனவுகளை மீள வசூலிக்கும் முயற்சிகளில் கனடிய வருமான முகவர் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கொவிட் பெருந்தொற்று ஏற்பட்ட காலப்பகுதியில் பொருளாதார ரீதியாக பாதிப்புகளை எதிர் நோக்கியவர்களுக்கு கனடிய அரசாங்கம் கொடுப்பனவுத் தொகைகளை வழங்கியிருந்தது.

சுமார் 9 மில்லியன் டொலர்கள் வரையில், இவ்வாறு தனிப்பட்ட நபர்களுக்கு நலன்புரி கொடுப்பனவாக கூடுதலாக செலுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கூடுதல் தொகை பணம் பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து அறவீடு செய்யும் நடவடிக்கைகள் கடுமையாக்கப்படும் என கனடிய வருமான முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் இந்த நடவடிக்கை கடுமையாக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு கூடுதலாக செலுத்தப் பட்ட பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு கூடுதலாகப் பெற்றுக் கொண்டவர்களின் சம்பளங்கள் அல்லது வங்கிக் கணக்குகள் ஊடாக மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகைகள் அறவீடு செய்யப்படலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கூடுதலாக நிதி செலுத்தப்பட்டவர்களில், மீள அளிப்பதற்கு ஒத்துழைக்காதவர்கள் அல்லது பதிலளிக்காதவர்களிடம் மட்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கனடிய வருமான முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்வாறு கூடுதலாக பெற்றுக் கொண்டவர்கள் ஏதேனும் ஒரு வழிமுறையில் கடனை மீள செலுத்துவதற்கு ஊக்குவிப்பதே தமது இலக்கு என மேலும் தெரிவித்துள்ளது.

# ரொறன்ரோ குடியிருப்பு ஒன்றில் வெப்பத்தால் அவதியுறும் மக்கள்

கடுமையான வெப்பம் காரணமாக ரொறன்ரோ குடியிருப்பு தொகுதியொன்றின் குடியிருப்பாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அந்தக் குடியிருப்பாளர்கள் காற்று சீராக்கிகள் இன்றி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

வீடுகளுக்குள் உள்ளே மக்கள் கடுமையான வெப்பநிலையை உணர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடைகால வெப்பநிலையினால் வீடுகளுக்குள் இருக்க முடியாத நிலைமை காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

42 மாடிகளைக் கொண்ட குடியிருப்பில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட வீடுகளில் காற்றுச் சீராக்கியின்றி குடியிருப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காற்று சீராக்கிகளில் கோளாறு ஏற்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையிலும் அவை பழுதுபார்க்கப்படவில்லை எனக் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

